செய்தி வெளியீடு எண். 1383 நாள்.13.07.2023

**செய்தி வெளியீடு**

**முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாநகர் போக்குவரத்துக் கழக அடையார் பணிமனையில் இன்று (13.07.2023) இலகுரக வாகனம் ஓட்டுநர் பயிற்சி துவக்க விழா, Breath Analyzer வழங்குதல், குளிரூட்டப்பட்ட பணியாளர் ஓய்வு அறை / HMV Driving Simulator திறப்பு விழா, சிறப்பு இலவச மருத்துவ முகாம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.**

**முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர்** அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாநகர் போக்குவரத்துக் கழக அடையார் பணிமனையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள் இன்று (13.07.2023) இலகுரக வாகனம் ஓட்டுநர் பயிற்சி துவக்க விழா, Breath Analyzer (மூச்சு பகுப்பாய்வி) வழங்குதல், குளிரூட்டப்பட்ட பணியாளர் ஓய்வு அறை / HMV Driving Simulator (கனரக பாவனையாக்கி) திறப்பு விழா, பணியாளர்களுக்கு சிறப்பு இலவச மருத்துவ முகாம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் 2023–2024 ஆம் ஆண்டு போக்குவரத்துத்துறை மானியக் கோரிக்கையில் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, அடையார் பணிமனையில் பணிபுரியும் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களின் வசதிக்காக, **ரூபாய் 5 இலட்சம் பொருட் செலவில்** ஏற்படுத்தப்பட்டுள்ள குளிர்சாதன ஓய்வு அறையினை, இன்று திறந்து வைத்தார்கள்.

விபத்துக்களை தவிர்த்திடும் பொருட்டு பணிமனைகளில் பேருந்துகளை இயக்க வரும் ஓட்டுநர்களிடம் Breath Analyzer வாயிலாக பரிசோதனை மேற்கொள்ள ஏதுவாக அனைத்து பணிமனைகளுக்கும் **ரூபாய் 15.05 இலட்ச மதிப்பீட்டில் 29 Breath Analyzer** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

பொது மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் இலகுரக வாகனம் ஓட்டுநர் பயிற்சி மற்றும் HMV Driving Simulator வாயிலாக ஓட்டுநர்கள் பயிற்சி எடுக்கும் பொழுது சாலையில் பேருந்துகள் இயக்கும் பொழுது ஏற்படும் விபத்துக்களை தவிர்த்திட இயலும் என்பதால், **ரூபாய் 28.92 இலட்ச மதிப்பீட்டில் 3 HMV Driving Simulator** மற்றும் **ரூபாய் 8.06 இலட்ச மதிப்பீட்டில் Bolero Car** ஒன்றும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

மேலும், அனைத்து பணியாளர்களின் உடல் நலம் பேணிடும் வகையில் சிறப்பு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில், மாண்புமிகு வேளச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா அவர்கள், போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி, இ.ஆ.ப., மேலாண் இயக்குநர் திரு.அ.அன்பு ஆபிரகாம், இணை மேலாண் இயக்குநர் திரு.க.குணசேகரன், பொது மேலாளர்கள், உயர் அலுவலர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in